## வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது

அன்பு சகோதர சகோதரிகளுக்கு இனிய வாழ்த்துக்கள்:
உலகத்திலே எவ்வளவோ வார்த்தைகள் உள்ளன. பல மிகவும் அருமையானவைகள்.
அவைகள் கடவுள் கொடுத்த ஞானத்தினாலே, மனிதன் படைத்த வார்த்தைகள்.
ஆனால் பரிசுத்த வேத வார்த்தைகளோ கடவுளாலே அருளப்பட்டது.
இறைவன் படைத்த இந்த உலகத்திலே, இறைவன் நமக்கு கொடுத்த இந்த வாழ்வு, ஒரு நாள் நிறைவுபெறும் என்பதை எல்லோரும் நன்கு அறிந்திருக்கிறோம்.
அதனால்தான் நாம் இந்த உலக வாழ்வு முடியும்போது, நம் உடல் அழிந்தாலும் என்றென்றும் அழியாத நம்முடைய ஆத்மா தொடர்ந்து இறைவனோடு வாழ வேண்டுமென்று **வாஞ்சிக்கிறோம்**.
இதையே நம் முன்னோர்களும் வாஞ்சித்து பல வழிகளை முயற்சித்தார்கள்.
நாமும் அதை முயற்சித்து, நமது பிள்ளைகளையும் முயற்சிக்க சொல்கிறோம்…..

***இந்த வாஞ்சை…….***

என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் **ஜீவஒளியை** அடைந்திருப்பான் என்ற ஆண்டவரின் அறிவுரையைப் பின்பற்றும்போது,…..***இந்த வாஞ்சை மெய்யாகவே நிறைவேறும்.***
**அப்படி என்ன இந்த வேத வார்த்தையின் சிறப்பான அம்சம் என ஒருகணம் சிந்திப்போம்.**

**I.**

ஆண்டவருடைய இந்த வேதம் சகலவற்றையும் தெளிவாக விளக்குகிறது:

a). தேவன் மனிதனை ஜீவாத்மாவாக சிருஷ்டித்து, தன் தேவ பிரசன்னத்திலே வைத்திருந்தார்.

b). மனிதன் தேவனிடமிருந்து பாவத்தினாலே பிரிக்கப்பட்ட போது, ஆத்மா ஜீவனை இழந்தது.

c). தேவனுக்குப் பிரியமான ஒரு சில மனிதர்கள் மூலமாக, மனித குலத்தை தம்மிடத்திலே மீண்டும் சேர்த்துக்கொள்ள தேவன் அன்பு கொண்டு வழியைத் தெரிவித்தார். ஆனால் மனிதனின் பெலவீனங்கள், அதற்கு தடையாக இருப்பதைக் கண்டு, தேவன் நம்மீது வைத்த மாறாத அன்பினாலே, **தேவனே** நம்மைப்போல மனிதனாக, இயேசு கிறிஸ்து என்னும் பெயரிலே நம்மிடத்தில் வந்து, நமக்காக யாவற்றையும் செய்து முடித்து, நமக்கு மீண்டும் ஆத்துமாவிலே ஜீவனைக் கொடுக்கவும் அதை பரிபூரணப்படுத்தவும் வழி ஏற்படுத்தினார். இதை அறிந்து விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்கள் அனைவரும் மீண்டுமாக ஜீவாத்மாவைப் பெறலாம்.

**II.**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, நமக்குள் இந்த ஆத்மீக மீட்பைக் கொடுக்க இந்த உலகத்திற்கு வருவார் என்பதை அறிவிக்க ~100க்கும் மேலான தீர்க்க தரிசனங்கள், 400 முதல் 1000 வருடங்களுக்கு முன்னதாகவே, இந்த வேதத்திலே சொல்லப்பட்டு, அவைகள் தெளிவாக அப்படியே நிறைவேறியுள்ளன.

**III.**

இப்படிப்பட்ட இந்த கடவுளின் ஜீவனுள்ள வார்த்தையைப் பற்றி இன்னுமொரு விவரம்:
வேதத்திலுள்ள 66 புத்தகங்கள், 40 எழுத்தாளர்கள் மூலமாக (பலர் ஒருவருக்கொருவர் சந்திக்காதவர்கள்), ~1600 வருட காலக்கட்டங்களில் ஆண்டவராலே (பரிசுத்த ஆவியின் மூலமாக) அருளப்பட்டதால், அனைத்து புத்தகங்களும் இயேசு கிறிஸ்து மூலமாக தேவன் ஏற்படுத்திய ஒரே நோக்கத்தை பிரதிபலிக்கிறதை அறியும்போது மிக மிக ஆச்சரியமாக உள்ளது.

இப்படிப்பட்ட வேதத்திலிருந்து ஒரு சில வார்த்தைகள்:
ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. (யோவான் 6:63)
என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் **ஜீவஒளியை** அடைந்திருப்பான். (யோவான் 8:12)
ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். (யோவான் 10:10)
என்றார் இயேசுகிறிஸ்து.
கிறிஸ்துவுனுடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். (யோவான் 1:12) என்கிறது வேதம்.

உங்கள் ஆத்மா பரிபூரணத்தை அடைந்து, இறைவனோடு என்றென்றும் வாழ வழிவகுத்த, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வேத புத்தகத்தை, தயவுசெய்து ஆழ்ந்து வாசித்து தியானியுங்கள். நன்றி. உங்கள்மேல் பிரியமுள்ள இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் இயேசுகிறிஸ்து மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.
(கொலோசெயர் 1:19-20)